Industrial Estates

* 848 Q.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்திலே எந்தெந்த இடங்களிலே தொழில் காலனிகள் நிறுவப்பட்டிருக்கின்றன ?

(ஆ) ஒவ்வொரு தொழிற்காலனிக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் மூல தனம் எவ்வளவு ?

(இ) இத் தொழிற்காலனிகள் அமைக்கப்படுவதற்காக இந்திய சர்க்கா ரால் கொடுக்கப்பட்ட மான்யத் தொகை எவ்வளவு ?

(ஈ) ஒவ்வொரு தொழிற்காலனியிலும் என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Industrial estates and colonies have been established and are proposed to be started at Guindy, Sulakkarai (near Virudhunagar), Erode, Pettai (near Tirunelveli), Madurai, Ariyamangalam (near Tiruchirappalli), Tanjore and Kunnathur (near Marthandam).

(b) The following expenditure has been sanctioned for each Industrial Estate :—

	RS. IN LAKHS.
Guindy	70·03
Sulakkarai	28·49
Erode	9·11
Pettai	6·16
Madurai	6·16
Ariyamangalam	6·17
Tanjore	6·61
Kunnathur	2·92

(c) The Government of India have approved a provision of Rs. 82·50 lakhs for the establishment of all these Industrial Estates during the Second Five-Year Plan period which will be given as a loan to this Government. A sum of Rs. 10·50 lakhs has been given as loan during the First Five-year Plan period.

(d) A statement [a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : இந்த ஸ்டேட்மெண்டைப் பார்த்தால் வட ஆற்காடு ஜில்லாவில் ஒரு தொழில் காலனியை ஆரம்பிப்பதாக இல்லை. வருங்காலத்திலாவது வட ஆற்காட்டில் ஒரு தொழில் காலனியை ஆரம்பிக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : "ஜெனரல் பர்ப்பஸ் வொர்க் ஷாப்" வைக்கப்பட்டிருக்கிறது. சிறு தொழில்களை ஆரம் பிக்கவும் ஏற்பாடு செய்து இருக்கிறோம். தொழில் பேட்டை வைப்பதற்கு அங்கே தொழில்கள் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் தொழில் பேட்டை வைத்துக்கொடுக்கப்படும். அதன் மூலமாக அங்கே தொழில்கள் முன்னேறும் என்ற நிலைமை ஏற்பட்டால் அதை வைக்க பின்பு யோசிக்கப் படும்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : சேலம் மிகவும் பிற்போக்கான ஜில்லாவாக இருக்கிறபடியால் சேலம் ஜில்லாவில் தொழில் பேட்டையை ஏற்படுத்த அரசாங்கம் யோசித்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

[a] Printed as Appendix III on page 548 infra.

17th March 1959]

THE HON. SRI R. VENKATARAMAN : சேலத்தில் பெரிய பெரிய தொழில்கள் வரப்போகின்றன. அதனால் அங்கே தொழில்பேட்டை அமைக்க அவசியம் இல்லை.

SRI T. S RAMASWAMY PILLAI : Sir, arising out of the statement placed on the Table of the House, may I know what industries have been started in the Industrial Estate at Virudhunagar?

THE HON. SRI R. VENKATARAMAN : They have not yet been started. Even the electric connections have not been received. The statement contains only the list of industries which have been allotted space in the Industrial estates.

SRI M. JAGANNATHAN : Sir, to sub-clause (c) of the question viz., what is the amount collected from the Central Government by way of grant, the Hon. Minister has replied that the Central Government have agreed to give us some loans. May I know whether this Government have asked for grant from the Central Government and if so, whether such a request was complied with?

THE HON. SRI R. VENKATARAMAN : The whole scheme is a loan scheme.

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலி ஜில்லாவில் தொழில் காலனி ஆரம்பிக்கவில்லை என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அதை எப்பொழுது ஆரம்பிப்பார்கள் என்பதை அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கூடிய சீக்கிரத்தில் ஆரம்பித்துவிடுவார்கள். வரும் பட்ஜெட் வருஷத்தில் அதாவது 1959–60-ல் எல்லா இடங்களிலும் ஆரம்பித்து விடுவார்கள்.

SRI K. ANBAZHAGAN : இந்த தொழில் நிலையப்பண்ணை (இண்டஸ்ட்ரீயல் எஸ்டேட்ஸ்) இன்றையதினம் எந்த அளவு நடத்தப்படுகிறதோ அதைப்போலவே இன்னும் இரண்டு மூன்று மடங்காக விரிவு படுத்துவதற்கு அரசாங்கத்தினிடம் ஏதாவது திட்டம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கொடுத்த பணம் பூராவும் "எக்ஸ்ஹாஸ்ட்" ஆயிற்று. நமது ராஜ்ய சர்க்கார் நிதியிலிருந்து செலவழித்துத்தான் அதிகமாக விரிவு படுத்த முடியும்.

SRI K. VINAYAKAM : Sir, as far as the Guindy Industrial Estate is concerned, are there any industrial units or shops that are still vacant for want of occupation, or, if they are all occupied, and if there is any further demand, will the Government consider the possibility of constructing some more and improving the estate? 9-10 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : There are hundreds of people waiting for space in the Guindy Industrial Estate. We have now scheduled to set up a hundred units. We are also thinking of acquiring another 150 acres of land adjacent to the estate for the purpose of future expansion.